Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 303

வெள்ளிக்கிழமை
26 செப்ரெம்பர் 2025

புரட்டாதி 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## தாழையடி கடற்பரப்பில் நீந்துவது பேராபத்தானது

யாழ்ப்பாணம், செப். 26
வடமராட்சி கிழக்கு தாழையடி கடற்பகுதிக்குச் செல்லும் சுற்றுலாப்பயணிகள், கடலுக்குள் இறங்கவேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. 11

தியாகதீபம் திலீபனின்

# 38ஆவது நினைவேந்தலின் இறுதிநாள் நிகழ்வு இன்று!

உணர்வுபூர்வ அஞ்சலிக்கு தாயகத்தில் ஏற்பாடு

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 26**

**தியாகதீபம் திலீபனின் 38ஆவது நினைவேந்தலின் இறுதிநாள் நிகழ்வுகள், தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இன்று உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்படவுள்ளன.** 11





சர்வதேசத்திடம் நீதிகோரி

## உணவுத்தவிர்ப்புப் போர் செம்மணியில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், செப். 26
ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேசத்திடம் நீதிகோரி, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் முன்னெடுக்கத் திட்டமிட்ட உணவுத் தவிர்ப்புப் போராட்டம் செம்மணி வளைவில் நேற்று ஆரம்பமானது. 11

ஆலங்குளம் துயிலுமில்லத்திலிருந்து

## இராணுவத்தை வெளியேற்றுக!

துணுக்காய் பிரதேசசபையில் தீர்மானம்

முல்லைத்தீவு, செப். 26
முல்லைத்தீவு துணுக்காய் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் இருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும் என்றும், அந்தப் பகுதியை புனிதப் பிரதேசமாக அறிவிக்குமாறும் கோரி தீர்மானம் நிறை 11

## சுதந்திர பலஸ்தீனத்தை அங்கீகரித்தது இலங்கை

ஐ.நா. பேரவையில் வைத்து ஜனாதிபதி அநுர அறிவிப்பு

கொழும்பு, செப். 26
பலஸ்தீனத்தின் சுதந்திரத்தையும் - இறைமையையும் அதன் பிரிக்கமுடியாத உரிமையையும் இலங்கை அங்கீகரிக்கின்றது - இவ்வாறு ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார்.
ஐக்கிய நாடுகள் பொதுச்சபை 11

திலீபன் நினைவேந்தல்;

## பருத்தித்துறையில் இன்று உணவுத்தவிர்ப்புப் போர்!

யாழ்ப்பாணம், செப். 26
தியாகதீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வின் இறுதி நாளாகிய இன்று, பருத்தித்துறை மருதடி முருகன் 11

இலங்கையில்

## அனைத்துப் பிரஜைகளுக்கும் சம உரிமை கிடைத்துள்ளதாம்

ஐ.நா.வில் சொன்னார் அநுர



கொழும்பு, செப். 26
இலங்கையில் அனைத்து இன மக்களுக்கும் சம உரிமைகளை வழங்குவதை நாங்கள் உறுதிசெய்துள்ளோம். அதன் அடிப்படையிலேயே, எமது நாடாளுமன்ற 11

குருநாகலில்

## கேபிள் கார் விபத்து ஏழு பிக்குகள் பலி!

கொழும்பு, செப். 26
குருநாகலில் அமைந்துள்ள பௌத்த வன ஆச்சிரமமான நா உயன ஆரண்ய சேனாசனத்தில் இடம்பெற்ற கேபிள் கார் விபத்தில் ஏழு பிக்குகள் 11

வடக்கு மாகாண

## பிரதிப் பிரதம செயலாளராக என்.ஆர்.சிவரூபன் நியமனம்!



யாழ்ப்பாணம், செப். 26
வடக்கு மாகாணப் பிரதிப் பிரதம செயலாளராக (நிதி) என். எஸ்.ஆர்.சிவரூபன் நியமிக்கப்பட்டுள் 11

முச்சந்தி முரளி

'ஊரார் பிள்ளைக்கு நீதி குடுக்கத் தெரிஞ்ச உவருக்கு சொந்த நாட்டுக்கு நீதி சொல்லத் தெரியேல கண்டியளோ'

நுணாவிலில் கோர விபத்து

## டிப்பருக்குள் வீசப்பட்டு இளைஞர் துயரச் சாவு!



யாழ்ப்பாணம், செப். 26
சாவகச்சேரி நுணாவில் கிழக்குப் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட கோர விபத்தின்போது, மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் அருகாகச் சென்ற டிப்பர் மீது தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்து உயிரிழந்துள்ளார்.
மீசாலை புத்தூர் சந்திப் பகுதியைச் சேர்ந்த திலகீஸ்வரன் 11

புதுக்குடியிருப்பு

## ஆடைத் தொழிற்சாலை வாகனம் அநுராதபுரத்தில் கோர விபத்து!

நான்கு பேர் பலி; ஆறு பேருக்குக் காயம்

விவரங்கள் தெரியாமல் உறவுகள் கொந்தளிப்பு

அநுராதபுரம், செப். 26
புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் இருந்து சென்ற வாகனம், அநுராதபுரத்தின் தலாவ சந்திக்கு அருகில் லொறி ஒன்றுடன் மோதி நேற்று விபத்துக்குள்ளானதில் நால்வர் உயிரிழந்ததுடன், 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 25.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4205 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 09 17 60 68 |
| விசேட எழுத்து | Y |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 25.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1272 |
| வெற்றி இலக்கினம் | [illegible] |
| வெற்றி இலக்கங்கள் | 31 33 45 52 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 25.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0231 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 6 4 1 4 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 25.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2311 |
| ஆங்கில எழுத்து | B |
| சுப்பர் இலக்கம் | 04 |
| வெற்றி இலக்கங்கள் | 07 32 41 69 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 25.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5963 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 1 6 7 1 6 7 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 25.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1993 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 13 17 24 76 |
| விசேட எழுத்து | H |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 25.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0538 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 7 1 6 7 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 25.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0079 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 04 23 26 46 |

# அரசுக்கு சார்பாக செயற்படாத நீதிபதிகளுக்கு இடமாற்றம்

*தயாசிறி எம்.பி. குற்றச்சாட்டு*

**கொழும்பு, செப்.26**

**அமைச்சர் வசந்த சமரசிங்கவைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்த வேண்டும் என்று உத்தரவிட்டமையாலேயே கல்கிசை நீதிமன்ற நீதிபதி உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். நீதிமன்ற சுயாதீனம் தொடர்பாகப் பிரதம நீதியரசர் விசேட கவனஞ்செலுத்தவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற விவாதம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுயாதீனமாகச் செயற்பட்ட நீதிமன்ற சேவை உத்தியோகத்தர்கள் சங்கம் அரசியல் நோக்கத்துடன் அரசாங்கத்துடன் தொடர்பு பட்டுள்ளது. சிரேஷ்டத்துவ மிக்க நீதிபதிகள் புறக்கணிக்கப் பட்டுள்ளார்கள்.

பதவி உயர்வு மற்றும் இடமாற்றம் விடயத்தில் இழைக்கப்படும் அநீதி தொடர்பில் நீதிமன்றக் கட்டமைப்பில் உள்ளவர்களுக்கு முறையிடுவதற்கு எங்கும் இடமில்லை. மேன்முறையீடு செய்ய முடியாது.

இந்த அரசாங்கத்திலும் இவ்வாறான நிலை இடம்பெறுவது பாரதூரமானது. தமக்கு இணக்கமான நீதிபதிகளைத் தமக்குரிய இடத்தில் வைத்துக்கொள்ளும் வகையிலேயே அரசாங்கங்கள் செயற்பட்டுள்ளன.

அமைச்சர் வசந்த சமரசிங்கவை கைதுசெய்து நீதிமன்றத்துக்கு உத்தரவிடுமாறு கல்கிசை நீதிமன்றத்தின் நீதிபதி உத்தரவிட்டார். ஆனால் வசந்த சமரசிங்க கைதுசெய்யப்படவில்லை. மாறாக அந்த நீதிபதி கஸ்பேவ மாவட்ட நீதிமன்றத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். கொழும்பு மாவட்டத்தின் பல நீதிபதிகள் இவ்வாறு முறையற்ற வகையில் இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார்கள்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமளிக்கமுடியாது. நாங்கள் இந்தவிடயத்தைச் சர்வதேச நீதிமன்றம், சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம், ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெசனல் ஆகிய இலங்கைக்கு அப்பாற்பட்ட நிறுவனங்களுக்கு கொண்டுசெல்வோம்- என்றார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 25.09.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0671 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கம் | 4 6 3 8 4 2 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 25.09.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2937 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 24 58 73 78 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 25.09.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 06 61 73 76 |
| வெற்றி வாரம் | 5098 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 25.09.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0777 |
| வெற்றி இலக்கம் | 06 17 42 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 25.09.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ராசி | சிம்மம் |
| வெற்றி இலக்கம் | 13 27 36 59 |
| சீட்டிழுப்பு வாரம் | 4649 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 25.09.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | Z |
| சுப்பர் இலக்கம் | 25 |
| வெற்றி இலக்கம் | 32 56 57 70 |
| வெற்றி வாரம் | 2113 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 25.09.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கம் | 43 53 58 75 |
| வெற்றி வாரம் | 2763 |

# பதவி உயர்வு நடைமுறையால் சிரேஷ்ட நீதிபதிகள் பாதிப்பு!

*முஜிபுர் ரஹ்மான் எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, செப்.26

நீதிபதிகளுக்கு பதவி உயர்வு வழங்கும்போது சிரேஷ்டத்துவத்தின் பிரகாரமே இதுவரை காலமும் வழங்கப்பட்டது. ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அந்த முறைமை மாற்றப்பட்டு, புள்ளிகள் அடிப்படையில் பதவி உயர்வு வழங்கும் முறை பின்பற்றப்படுவதால், சிரேஷ்ட நீதிபதிகள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த விடயத்தில் நீதிபதிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதா என்பதை ஆராய அரசாங்கம் தெரிவுக்குழு அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேல் நீதிமன்றங்களுக்கு 16 நீதிபதிகள் பதவி உயர்வு வழங்கி நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் அனைவரும் நீதிமன்ற ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையிலேயே நியமிக்கப்பட்டுள்ளனர். நேர்முகப்பரீட்சை நடத்த நீதிமன்ற ஆணைக்குழுவால் 3உறுப்பினர்கள் நியமிக்கப்படவேண்டும். ஆனால் இரண்டு உறுப்பினர்களே இந்த நேர்முகப்பரீட்சையை நடத்தியுள்ளனர். நேர்முகப்பரீட்சை இடம்பெற்ற பின்னரே 3ஆவது உறுப்பினர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பதவி உயர்வு வழங்கும் பெயர்ப் பட்டியலில் 252 பேரின் பெயர்கள் உள்ளன. அதில் ஆரம்பநிலையில் இருக்கும் 35பேரில் இருந்தே 16 பேர் புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். ஆனால் இந்தப் பட்டியலில் முதல் 3 ஆவது நிலையில் இருப்பவர்களுக்குப் பதவி உயர்வு இல்லை. அவர்கள் நீதிச்சேவையில் பல வருடங்கள் அனுபவமுள்ளவர்கள்.

அதேநேரம் பட்டியலில் 33ஆவது இடத்தில் இருப்பவருக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. அவர்தான் அண்மையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கைது செய்ய உத்திரவிட்ட நீதிபதி. இது எவ்வாறு சாத்தியமாகும்?- என்றார். (எ-இ)

# நிஷாந்தவின் மறியல் நீடிப்பு

கொழும்பு,செப்.26

முன்னாள் கடற்படைத்தளபதி நிஷாந்த உலுகெதென்ன மற்றும் கடற்படையின் முன்னாள் புலனாய்வுப் பணிப்பாளர் ரியர் அட்மிரல் சரத் மொஹொட்டி ஆகியோரை எதிர்வரும் ஒக்ரோபர் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க பொல்கஹவெல நீதிவான் உத்தரவிட்டுள்ளார். நிஷாந்த உலுகெதென்ன 2010ஆம் ஆண்டில் கடற்படை புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக இருந்தபோது நடந்த கடத்தல் மற்றும் காணாமற்போன சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# தனியார் பஸ்களில் 'டிக்கெட்' கட்டாயம்



கொழும்பு, செப்.26

அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து தனியார் பேருந்துகளில் பயணச்சீட்டு வழங்குவதும் பெறுவதும் கட்டாயமாக்கப்படும் என மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் காமினி ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

பயணச்சீட்டு வழங்காத நடத்துநர்கள் மற்றும் பயணச்சீட்டுகளைப் பெறாத பயணிகள்மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த ஆண்டு இறுதிக்குள் அட்டை மூலம் பணம் செலுத்தும் வசதி அறிமுகப்படுத்தப்படுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# எதிரணிகள் ஒன்றுதிரண்டால் முற்போக்குக் கூட்டணி ஆதரவு

*இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு*

கொழும்பு, செப்.26

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிரணிகள் ஓரணியில் திரண்டால் அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர் வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எதிரணிகள் ஒன்றிணைவதற்குரிய சூழ்நிலை ஏற்பட்டால் நிச்சயம் அதனைச் செய்யவேண்டும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுக்கும் சிறந்த வேலைத்திட்டங்களுக்கு ஆதரவு வழங்கப்படும், தவறிழைக்கப்பட்டால் நிச்சயம் அவற்றை எதிர்ப்போம். மக்கள் வாக்களிக்கும் வரை அரசியலில் ஈடுபடும் எண்ணத்துடன்தான் இருக்கின்றேன்- என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### இலங்கையில்
# மார்பகப் புற்றுநோயால் தினசரி 3 உயிரிழப்புகள்

**கொழும்பு, செப்.26**

**இலங்கையில் தினசரி சுமார் 15 புதிய மார்பகப் புற்றுநோய் நோயாளிகளும், அதனுடன் தொடர்புடைய மூன்று இறப்புகளும் பதிவாகின்றன எனச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்**

2022ஆம் ஆண்டில் 19 ஆயிரத்து 457 பெண்களுக்குப் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது. இவர்களில், 5 ஆயிரம் 477 பேர் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள். இது, பெண்களுக்கான அனைத்து புற்றுநோய் நிகழ்வுகளிலும் 28 வீதமாகும்.

மார்பகப்புற்றுநோயைஆரம்ப நிலையிலேயே கண்டறிந்தால் குணப்படுத்தமுடியும் என்றாலும், கிட்டத்தட்ட 30 வீத வழக்குகள் மேம்பட்ட நிலைகளில் கண்டறியப்படுவதால், குணமடைவது மிகவும் கடினமாகிறது.

அதிகாரபூர்வத் தரவுகளின்படி, இலங்கையில் ஆண்டுக்கு 15 ஆயிரத்து 245 புற்றுநோய் தொடர்பான இறப்புகள் ஏற்படுகின்றன. இதில், 798 இறப்புகள் மார்பகப் புற்றுநோயால் ஏற்படுகின்றன.

20 முதல் 40 வயதுக்குட்பட்ட பெண்கள் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் ஒருமுறை மருத்துவ மார்பகப் பரிசோதனையைமேற்கொள்ளவேண்டும். 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஆண்டுதோறும் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## அருட்சகோதரி கிறிஸ்ரா காலமானார்!

யாழ்ப்பாணம், செப். 26

திருக்குடும்பசபை சகோதரிகளின் யாழ்ப்பாண 'மாகாண' முன்னாள் முதல்வர் அருட்சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ் (வயது 56) கடந்த செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

திருக்குடும்ப கன்னியர்களின் உயர்தலைவரின் ஆலோசகராக உரோமாபுரியில் பணிபுரிந்துகொண்டிருந்தவேளையில் சுகவீனமுற்றநிலையில் காலமானார்.

இவர் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் ஆசிரியராக பணிபுரிந்தார். பின்னர் திருக்குடும்பக் கன்னியர்களின் நிதிப்பொறுப்பாளராகவும், மாகாணமுதல்வராகவும் பணியாற்றினார். (ம)

## மகள்கள் துஷ்பிரயோகம்; தந்தைக்கு கடூழியச்சிறை

மட்டக்களப்பு,செப்.26

மட்டக்களப்பில் தனது 7 மற்றும் 8 வயது மகள்களை 2016 ஆம் ஆண்டு பாலியல் துஷ்பிரயோகம் செய்த தந்தைக்கு 20 வருட கடூழிய சிறைத்தண்டனையும் 40 ஆயிரம் தண்டப்பணமும் பாதிக்கப்பட்ட சிறுமிகளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் வழங்குமாறும் மட்டக்களப்பு மேல் நீதிமன்று தீர்ப்பளித்துள்ளது.

குறித்த நபருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட சிறுமிகளைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த 4 குற்றச்சாட்டுகள் தொடர்பாக சாட்சியங்கள், சான்றுப்பொருள்கள் மற்றும் சட்டமருத்துவர் அறிக்கைமூலம் அவர் குற்றவாளியாக இனங்காணப்பட்டதையடுத்து இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## வெளிநாட்டுப் பணியாளரின் காப்பீட்டு இழப்பீடு அதிகரிப்பு

கொழும்பு,செப்.26

வெளிநாட்டில் பணிபுரியும்போது உயிரிழக்கும் இலங்கைத் தொழிலாளிகளுக்கு வழங்கப்படும் காப்பீட்டு இழப்பீடுத் தொகை 2 மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டில் பணிபுரியும்போது இறக்கும் இலங்கைத் தொழிலாளிகளுக்கு இதுவரை வழங்கப்படும் காப்பீட்டு இழப்பீடுத் தொகை 6 இலட்சமாகும். தற்போது அதனுடன் ரூபா 1.4 மில்லியனைச் சேர்த்து 2 மில்லியன் ரூபா இழப்பீடாக வழங்கப் பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ஒன்றரைக்கோடி பெறுமதி போதைப்பொருளுடன் இந்தியப்பிரஜை கைது

கொழும்பு,செப்.26

கட்டுநாயக்க விமானநிலையத்தில் ஒரு கோடியே 55 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருள் தொகையுடன் இந்தியப் பிரஜை ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப்பிரிவினரால் சந்தேகநபர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச)

## கிணற்றில் இருந்து சடலமொன்று மீட்பு

யாழ்ப்பாணம். செப். 26

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் தெற்குப் பகுதியில் கிணற்றுக்குள் இருந்து நபரொருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

செல்லையா இராசையா (வயது - 48) என்ற நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-131)

## அதுவேற வாய்

"அநுர அண்ணாச்சி சொன்னது என்னாச்சு?"எண்டு மன்னார்ச் சனம் கொந்தளிச்சுப் போய் நிக்குது. எலக்சன் ரைமில அங்க போன அநுர "அதானியின் காற்றாலைத் திட்டத்தை நிப்பாட்டுவன்" எண்டு மன்னாரில வாக்குறுதி குடுத்திட்டு வந்தவர். இப்ப என்னடாவெண்டால் அதே அநுரவே, "ஆர் எதிர்த்தாலும் காற்றாலைத் திட்டம் நடக்கும்" எண்டு உத்தரவு போட்டிருக்கிறார். இதுதான் சனத்தின்ர கொதிப்புக்குக் காரணம். இந்தநேரத்தில கன பேர் கேக்கிற ஒரேகேள்வி "உலகத்திலேயே பக்கவிளைவுகள் இல்லாத தூய மின்திட்டம் எண்டு கொண்டாடப்படுகிற காற்றாலை மின்சாரத்திட்டத்தை ஏன் மன்னார்ச் சனம் எதிர்க்குது? இந்த எதிர்ப்பு மொக்குத்தனமாத் தெரியேலையோ?" எண்டதுதான் அந்தக் கேள்வி.

அப்பிடிக் கேக்கிறவையிலையும் ஒரு நியாயம் இருக்குது. ஆனால் அதைமாதிரி மன்னார்ச் சனமும் மொக்குத்தனமாப் போராடேலை. அவைக்கும் ஒரு நியாயம் இருக்குது. மன்னார்ச் சனங்கள் ஏன் போராடுகினம்? இந்தக் காற்றாலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தமுதல் அந்த இடத்தில "சுற்றுச்சூழல் தாக்கம் பற்றின மதிப்பீடு" செய்ய வேணும். ஆனால் அது மன்னாரில சரியாச் செய்தவையா எண்டு எல்லாருக்கும் டவுட். அந்த டவுட்டை இதுவரைக்கும் ஆரும் கிளியர் பண்ணேலை. அதோட காற்றாலைத்திட்டத்துக்கும் சில விதிமுறையள் இருக்கு. ஒரு காற்றாலைக்கும் இன்னொரு காற்றாலைக்கும் இடையில 800 தொடக்கம் 1200 மீற்றர் இடைவெளி இருக்கோணும், காற்றாலையின்ர சத்தம் பெரிசாக் கேக்காதபடி செய்யோணும், பறவையள் பறக்கேக்க தன்ரபாட்டிலையே காற்றாலை நிக்கிறமாதிரியான பொறிமுறை வேணும் எண்டு சில ரூல்ஸ் இருக்கு. ஆனால் அதொண்டும் மன்னாரில நடைமுறைக்கு வரேலை. மன்னார்த்தீவே ஒரு சின்ன இடம். அதுக்குள்ள இப்பிடிப்பெரிய இடைவெளிவிட்டு,102காற்றாலையளை நிப்பாட்டுறது எண்டா முடியிற காரியமோ? அப்பக் கிட்டக் கிட்டத்தான் காற்றாலையை அமைப்பினம். அப்பிடி அமைச்சால் சனத்துக்கும் பறவையளுக்கும் சூழலுக்கும் பாதிப்புத்தானே. அதோட குடியிருப்புகளில இருந்து இவ்வளவு தூரத்துக்கு அங்காலதான் காற்றாலையளை அமைக்கோணும் எண்டும் விதியள் இருக்கு. ஆனால் மன்னாரில குடியிருப்புகளுக்குக் கிட்டத்தான் காற்றாலையளை அமைக்கினம். அப்ப அதால வாற பாதிப்புகளுக்கு ஆர் பதில் சொல்லுவினம்?

அதைவிட மன்னாரில கன இடங்கள் கடல்மட்டத்தில இருந்து ஆகக்கூடினது 2 மீற்றர் உயரத்திலதான் இருக்குது. அதால வெள்ளமும், கடல் தண்ணியும் எப்பவேனுமெண்டாலும் எதுவும் செய்யலாம் எண்ட நிலைமைதான் அங்க இருக்குது. இந்தநிலைமையில காற்றாலையளை அமைக்கிறதுக்குக் கிட்டத்தட்ட 25 தொடக்கம் 30 அடி ஆழத்தில 102 இடங்களில பெரிய கிடங்குகளை வெட்டினால் என்ன நடக்குமெண்டு ஒருக்கா யோசிச்சுப் பாருங்கோ. கடல் அப்பிடியே தவண்டுவந்து எல்லாத்தையும் சுருட்டிக்கொண்டு போடுமெல்லோ. இதுகளையெல்லாம் யோசிச்சுத்தான் வருமுன் காப்போம் எண்டு மன்னார்ச்சனம் போராடிக்கொண்டிருக்குதுகள். அதொண்டும் தெரியாமல் எலக்சன் நேரத்தில ஒரு பேச்சு, அதிகாரத்துக்கு வந்த உடன இன்னொரு பேச்சு எண்டு அநுரமாதிரி எல்லா ஆட்சியாளர்களும் தங்கட லாப நட்டங்களைத்தான் பாக்கினமேதவிர சனத்தைப் பற்றி ஒருத்தரும் யோசிக்கினமில்லைக் கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதால், உற்சாகமாக இருப்பீர்கள். சகோதரர்களால் நன்மை உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**இடபம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத தனலாபம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது வீண்மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் பேச்சில் நிதானம் தேவை. மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் வீட்டில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக் கூடும். மகிழ்ச்சி ஏற்படும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அலுவலகப் பணிகளில் பொறுமை அவசியம்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**கன்னி:** சகோதரர்களால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படும். பொறுமையுடன் இருப்பது நல்லது. தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

**துலாம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை. தாயின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**விருச்சிகம் :** உறவுகளால் ஆதாயம் ஏற்படக்கூடும். மகிழ்ச்சி உண்டாகும். இளைய சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**தனுசு:** தேவையற்ற செலவுகள் ஏற்படும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு உண்டு. பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**மகரம்:** புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்பு ஏற்படக்கூடும். நண்பர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** காரியங்களில் பொறுமை தேவை. எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன் வாங்கவும் நேரிடும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும். வீட்டில் சிறு சலசலப்பு ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவாக இருப்பார்கள். ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

# தீபங்கள் அணையலாம் திலீபம் அணைவதில்லை



■ கோபாலகிருஷ்ணன் யாழினிப்ரியா

“ஒரு சமூகத்தின் உரிமைக்காக உயிரையே அர்ப்பணித்தவர்களே உண்மையான வரலாற்றை உருவாக்குகிறார்கள். அத்தகைய வரலாற்றின் பொற்காலப் பக்கங்களில் அழியாமல் பொறிக்கப்பட்ட பெயர் தியாக தீபம் திலீபன்.” தமிழர் அரசியல் போராட்டத்தில் தியாகத்தின் ஒளியாய், இளைஞர்களின் ஊக்கத் தீபமாகத் திகழ்ந்தவர் தியாகதீபம் திலீபன். உயிரையே பணயம் வைத்து உரிமைக்கான போராட்டத்தில் தன்னை அர்ப்பணித்த அவரது நினைவு இன்றுவரை தமிழர் மனதில் தீபமாக எரிகிறது.

தியாக தீபம் திலீபன்... இந்தப் பெயர் ஒவ்வொரு தமிழரின் உள்ளத்தில் நிறைய உணர்வுகளை எழுப்புகிறது. 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம், யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் தன் உயிரைச் சமர்ப்பித்து, தமிழர்களின் உரிமைக்காகப் போராடியவர். பார்த்தீபனின் கண்களில் எப்போதும் நீதி, உறுதி மற்றும் மனிதநேயம் இருந்தது.

இலங்கை அரசின் ஒடுக்குமுறையில் இருந்து காப்பாற்றுவதற்காக அமைதிப் படை என்ற போர்வையில் இந்தியா ஈழத்துக்குள் நுழைந்தது. ஆனால், காக்க வந்தவர்களே மிக மோசமான அழிவுகளை எமக்குத் தந்தனர். எனவே, அதனைத் தடுத்து நிறுத்த அகிம்சையை ஆயுதமாகக் கொண்டு ஐந்து அம்சக் கோரிக்கைகளோடு பட்டினிப் போரில் குதித்தான் பார்த்தீபன்.

செப்ரெம்பர் 15 அன்று, நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் அவர் தன் வாழ்வை உணவின்றி 12 நாள்கள் போராடத் தொடங்கினார். நாட்கள் கடந்து சென்றாலும், திலீபனின் மனம் வெறுமனே உறுதியுடன் கொண்டிருந்தது. அவர் உடல் பலவீனமாகி, கண்ணீர் மலர்ந்தாலும், அவருடைய இதயம் தமிழர்களின் விடுதலைக்காகத் துடித்தது. அந்த 12 நாள்கள், தமிழீழ மக்களின் நெஞ்சுகளைக் கண்ணீரால் நிறைத்து, உலகையே அதிர வைத்த ஒரு போராட்டமாக இருக்கிறது.

செப்ரெம்பர் 26 அன்று, திலீபன் உயிரிழந்தபோது, ஒவ்வொரு தமிழரின் இதயத்திலும் கண்ணீர் ஓடியது. ஆனால், அவர் நம்மை விட்டுப்போனார் என்றால் அது வெறும் இறப்பு அல்ல; அது தமிழீழ விடுதலைக்கான ஆசீர்வாதமாகவும், நெருங்கிய நினைவாகவும் மாறியது. அவர் தந்த தியாகம், அமைதியான முறையில் போராடுவதன் முக்கியத்துவத்தை உலகுக்கு எடுத்துக் காட்டியது. திலீபனின் நினைவாக, நல்லூரில் அவரது தூபி நிறுவப்பட்டது. ஆண்டுதோறும், அவருடைய தியாக தினத்தை தமிழர்கள் நினைவுகூர்ந்து, அவருடைய வாழ்க்கையை, குரல்கொடுத்த போராட்டத்தை நினைவுகூருகின்றனர்.

இன்றும், திலீபனின் பெயர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒளி போல, நம்மை ஊக்கப்படுத்துகிறது. அவர் தந்த உணர்வு, உணர்ச்சி, மனம் மையப்பட்ட தியாகம் எப்போதும் தமிழர்களின் இதயத்தில் வாழும். திலீபன் சொன்னதுபோல, “நியாயத்திற்கு உயிரைப்போராடும் போது, மனம் வாழும்; உடல் மறைந்துபோகலாம்.” அவரது உயிர், தமிழ் மக்களின் விடுதலைக்கான ஆர்வத்தின் தியாகதீபமாக எப்போதும் எரிகிறது.

திலீபனின் உயிர்த்தியாகம் அன்றைய அரசியல் சூழலில் தமிழரின் உரிமைப் பிரச்சினைகளை வெளிச்சத்திற்கு கொண்டுவந்தது. இன்றைய அரசியல் சூழலில் கூட அவர் எழுப்பிய கோரிக்கைகள் நிறைவேறாமல் நீடிக்கின்றன என்பதால், அவரது நினைவு இன்னும் தீவிரமடைகிறது. எதிர்காலத்திலும் ஈழத்தமிழர் வரலாற்றை எழுதும் பொழுதெல்லாம், தியாகதீபம் திலீபனின் பெயர் என்றும் அழியாத ஒளியாக இடம்பெறும்.

இன்று, அவரது 38ஆவது ஆண்டு நினைவு அஞ்சலியை அமைதியான மனோபாவத்துடன் கடைப்பிடிக்கிறோம். அந்த 12 நாள்கள் நீடித்த உண்ணாவிரதப் போராட்டம், தமிழர் விடுதலைக்கான போராட்டத்தில் அடையாளமாக மாறி, அரசியல், சமூக நீதிக்கான அக்கறையுடன் தமிழர்களின் இதயங்களில் என்றும் மகத்தான தாக்கத்தை ஏற்படுத்தியது.

“எந்தப் போராட்டமும் வன்முறையால் மட்டும் அல்ல; தன்னலமற்ற தியாகத்தாலும் வெற்றி பெறமுடியும் என்பதை உலகம் அறிய வைத்தவர் தியாக தீபம் திலீபன். காலங்கள் கடந்தாலும், அவரின் உயிர் தியாகத்தின் இழப்பு நம் தமிழர்களை இன்றும் நினைவூட்டுகிறது. இவரின் தியாகம் ஈழத்தமிழர்கள் எமக்கு அன்றும் இன்றும் என்றும் ஆறாத நினைவலையே.

# வல்வெட்டித்துறையில் குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம் ,செப்.26

யாழ்ப்பாணம் இரத்த வங்கியின் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் முகமாக வல்வெட்டித்துறை இரத்ததான சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட 81 ஆவது இரத்ததான முகாம் வல்வெட்டித்துறை நெடியகாடு பகுதியில் அமைந்துள்ள கணபதி மஹாலில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

இந்த இரத்ததான முகாமில் குருதிக்கொடை வழங்கியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தேர்வுசெய்யப்பட்டு பெறுமதியான வெள்ளிப்பதக்கம் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் 0779911131 என்ற இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு முன்பதிவு செய்யுமாறும் வல்வெட்டித்துறை இரத்ததானச்சங்கத் தலைவர் பா. வீரசுரேந்திரன் தெரிவித்துள்ளார். (ச-100)

# பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு இன்று

யாழ்ப்பாணம்,செப்.26

நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களின் நலன்கருதி கிறிஸ்தவ நாகரிகத்தை ஒரு பாடமாகக் கற்கும் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டலின் இறுதிக் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்கு புனித ஹென்றியரசர் கல்லூரியில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# காற்றில் பறக்கும் வாக்குறுதி

மன்னாரில் காற்றாலைத் திட்டங்களைத் தொடர்வதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அனுமதி வழங்கியிருக்கின்றார் என்று தெரிகின்றது. அநுரகுமார திஸாநாயக்க பதவிக்கு வருவதற்கு முன்னர் மன்னார் மக்களுக்கு வழங்கியிருந்த வாக்குறுதிக்கு நேர்மாறாக இந்த அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. தமது வாழ்வாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான கவலைகள், எதிர்கால அரசாங்கத்தின் திட்டங்களில் மதிக்கப்படும் என்று நம்பியிருந்த மன்னார் மக்களின் நம்பிக்கையை, அநுர அரசாங்கத்தின் தற்போதைய தீர்மானம் தகர்த்திருக்கின்றது.

ஒரு பிரதேசத்தில் பெரும் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்போது அந்தப் பிரதேச மக்களின் கருத்துகள் முக்கியமானவை. முதலீட்டாளர்கள் தங்களது இலாபத்தை மட்டுமே கணக்கிடுவதால், அந்தத் திட்டங்களால் பிரதேசத்தில் ஏற்படும் நீண்டகாலத் தாக்கங்களைக் கருத்தில் எடுப்பதில்லை. ஆனால் அந்தப் பிரதேசத்தின் வளங்களையே வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கும் மக்கள் காலப்போக்கில் வாழ்வாதார, பொருளாதாரச் சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். மன்னார் மக்களிடம் உள்ள சமூக, சூழல் தொடர்பான எதிர்கால அச்சமே காற்றாலைத் திட்டத்தை இடமாற்றவேண்டும் என்ற போராட்டமாக மாறியிருக்கின்றது. மக்களின் போராட்டத்தின் அர்த்தம் அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்தவேண்டும் என்பது அல்ல, பொருத்தமான இடங்களுக்கு நகர்த்தவேண்டும் என்பதே என்பதையும் அரசாங்கம் புரிந்துகொள்ளவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக மன்னாருக்குச் சென்ற அநுரகுமார திஸாநாயக்க, வாழ்வாதாரம், சூழலியல், சமூக வாழ்வைப் பாதிக்கும் எந்தத் திட்டமும் மக்களின் விருப்பத்திற்கு மாறாக முன்னெடுக்கப்படமாட்டாது என்று உறுதியளித்திருந்தார். ஆனால் ஆட்சி அதிகாரத்துக்கு வந்தபின்னர் அவரது அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாடுகள், அரசியல்வாதிகள் மக்களை வெறும் வாக்குச் சேகரிப்புக்காக மட்டுமே அணுகுகிறார்கள் என்ற ஏமாற்ற உணர்வை ஆழமாக வேரூன்றச் செய்திருக்கின்றது. காலம் காலமாக தமிழ் மக்கள் சந்தித்த இந்த ஏமாற்றம், கடந்த கால அரசாங்கங்களில் இருந்து அவர்களை அந்நியப்படுத்தியிருந்தது. இந்த ஏமாற்றம் நிச்சயம் தற்போதைய அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையையும் குறைக்கும். இந்த நம்பிக்கையீனம் முன்னேற்றத்தை - அபிவிருத்தியை நோக்கிய இலங்கையின் ஓட்டத்தின் வேகத்தை மட்டுப்படுத்தும் என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும்.


மக்களின் எதிர்பார்ப்புகளையும், நியாயமான அச்சங்களையும் கருத்திற்கொண்டு செயற்படுவதே அரசாங்கத்தின் முதன்மை கடமை என்பதனை அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கம் நினைவில் கொள்ள வேண்டும். நாட்டின் அபிவிருத்தி - பொருளாதார முன்னேற்றத்துக்குச் சமாந்தரமாக மக்களின் கருத்துகளும், எதிர்பார்ப்புகளும் கருத்திற்கொள்ளப்படவேண்டும். அபிவிருத்தி என்பது வெறும் எண்கள் அல்லது முதலீடுகளால் மட்டுமே அளவிடப்படுவதில்லை, அது மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும்போது மட்டுமே அர்த்தமுள்ளதாக மாறும். மன்னார் மக்களின் குரல் கேட்கப்படாமல் முன்னெடுக்கப்படும் எந்த அபிவிருத்தியும், நீண்டகாலத்தில் நாட்டின் சமூக-அரசியல் அமைப்புக்குத் தீங்கு விளைவிக்கக்கூடும். அதனால் அரசாங்கம் மக்களின்நம்பிக்கையை மீட்டெடுப்பதற்காக, வாக்குறுதிகளை நிறைவேற்றி, மக்களின் விருப்பங்களை மையமாகக்கொண்டு செயற்படவேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## நாளொரு நல்வார்த்தை

உண்மை கடினமானது. தொடுகையில் உடையும் ஒரு குமிழியைப் போல அது உடையாது.

– வெண்டெல் ஹோம்ஸ்–




7 மாதங்களில்

## சிறுவர் துஷ்பிரயோகம் 1000 + முறைப்பாடுகள்!




**கொழும்பு , செப்.26**
**2025 ஆம் ஆண்டின் முதல் 7 மாதங்களில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 1,126 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் தண்டனைச் சட்டத் திருத்தச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
வீடுகள், பாடசாலைகள், தடுப்பு மையங்கள் மற்றும் வீதிகள் போன்ற இடங்களில் சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகுகின்றனர்.
கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இந்த வருடத்தில் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ச-இ)

## யானை தாக்கி ஒருவர் சாவு!

மட்டக்களப்பு,செப்.26
மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூலாக்காடு, சீல்லிக்கொடிப் பகுதியில் யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
பூலாக்காடு, கிரான் பகுதியைச் சேர்ந்த 63 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
குறித்த நபர் மீன் பிடிப்பதற்காகச் சென்று இரவு வெகுநேரமாகியும் வீடு திரும்பாததால் அவரது குடும்பத்தினர் தேடிச் சென்றபோதே யானைத் தாக்குதலுக்குள்ளாகி சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ச-இ)



## மேர்வின் வழக்கு விசாரணைக்கு!

கொழும்பு ,செப்.26
முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா அமைச்சராகச் செயற்பட்ட காலத்தில் சட்டவிரோதமாகச் சொத்துகளைச் சேர்த்தார் எனக் கூறி, அவருக்கு எதிராக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு தாக்கல் செய்த வழக்கின் விசாரணைக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் திகதியிட்டுள்ளது. இதன்படி, இந்த வழக்கின் விசாரணை எதிர்வரும் நவம்பர் 17 ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ளது. (ச-இ)

## முப்படை அழைப்பு

கொழும்பு, செப்.26
பொதுப்பாதுகாப்பைப் பேணுவதற்காக முப்படைகளை வரவழைத்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிவிசேட வர்த்தமானியொன்றை வெளியிட்டுள்ளதாக சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.
செப்ரெம்பர் 27, 2025 முதல் நடைமுறைக்குவரும் என இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## வாகன இறக்குமதி வருவாய் இரட்டிப்பு

கொழும்பு, செப்.26
வாகன இறக்குமதியால் அரசுக்குக் கிடைக்கும் வருவாய் 2025ஆம் ஆண்டுக்கான இலக்கைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று பொது நிதிக்குழுவின் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
2025ஆம் ஆண்டிற்கான வாகன இறக்குமதியிலிருந்து எதிர்பார்க்கப்படும் வருவாய் இலக்கு 460 பில்லியன் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டது. தற்போதைய போக்குகள் இந்த வருவாய் சுமார் ரூ. 700 பில்லியனை எட்டக்கூடும் என்றும் வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைக்கான கூடுதல் தலைமை இயக்குநர் மல்ஷனி அபேரத்ன தெரிவித்துள்ளார். (ச-இ)

நாளை
சனிக்கிழமை - புரட்டாதி 11
27.09.2025
சுபநேரம் : 03.02 - 04.32
ராகுகாலம் : 09.02 - 10.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சட்டவிரோதக் கட்டுமானம் பிரதேசசபையால் இடிப்பு

யாழ்ப்பாணம்,செப்.26
கரவெட்டி மாலைசந்தைப் பகுதியில் முன் அனுமதியின்றி, சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட கட்டுமானம் வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேசசபை தவிசாளரின் அறிவுறுத்தலின்பேரில், செயலாளரின் நேரடிக் கண்காணிப்பில் நேற்று முன்தினம் இடித்தழிக்கப்பட்டது.
வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையால், தொடர்ச்சியாக சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுவரும் சட்டவிரோதக் கட்டுமானங்கள் தொடர்பாக தொடர்ந்தும் சட்டநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. அதற்கமைவாகப் பிரதேசசபை அமர்வில் ஏகமனதாக எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் குறித்த சுற்றுமதில் இடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-100)

### தங்காலைப் பிரதேசத்தில்

# மீட்கப்பட்ட போதைப்பொருளுக்கு பெரமுனவும் பதில்கூற வேண்டும்!

### கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், செப்.26**
**தங்காலை போன்ற இடங்களில் தங்களை மீறி எதுவும் நடக்காது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் அடிக்கடி பெருமிதத்துடன் கூறும் நிலையில், தங்காலையில் பெருமளவு போதைப்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் அவர்கள் பதில்கூறவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
தங்காலையில் பெருந்தொகை போதைப்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வளவு பெருந்தொகைப் போதைப்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை இதுவே முதன்முறை.
தமிழர்களின் அரசியல் கோட்பாடுகளை, அரசியல் இலட்சியத்தை, அரசியல் செயற்பாடுகளைச் சிதைப்பதற்காகத் திட்டமிட்டுப் பரப்பப்பட்டபோதைப்பொருள் பாவனை இன்று சிங்கள மக்கள் மத்தியிலும் ஆபத்தை ஏற்படுத்துகின்ற சூழலைத் தோற்றுவித்துள்ளது.
வடக்கு- கிழக்குப் பிரதேசங்கள் ஐஸ் போன்ற போதைப் பொருள்களாலும், மதுப்பழக்கத்தாலும் தற்போது முற்றுமுழுதாக மூழ்கிப் போயுள்ளது. முன்னைய அரசாங்கங்கள் மாத்திரமல்லாமல் தற்போதைய அரசாங்கமும் இதற்குத் திட்டமிட்டு அனுமதித்துள்ளது. தற்போது வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகத்தில் ஒரு இராணுவச் சிப்பாய்க்கு 10 பொது மக்கள் என்ற விகிதத்தில் தமிழர் தாயகத்தை இராணுவம் ஆக்கிரமித்துவைத்துள்ளது. அதுவும் வன்னி ஓர் இராணுவச் சிப்பாய்க்கு 4 பொதுமக்கள் என்ற அடிப்படையில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தின் அனுமதி, விருப்பத்தை மீறி வடக்கு- கிழக்கில் போதைப் பொருள் வியாபாரம் நடக்கமுடியாது.
எதிரிக்கு எதிரான செயற்பாடுகள் தானே! என்று சிங்கள மக்கள் தங்கள் அரசாங்கங்கள் செய்த மிகத் தவறான செயற்பாடுகளையும் அனுமதித்திருக்கலாம். அவ்வாறானதொரு செயற்பாடே தற்போது தென்னிலங்கையை ஆட்டிப்படைக்கத் தொடங்கியுள்ளது.
தமிழ்மக்களுக்கும் சிங்களத் தேசத்துக்குமிடையில் காணப்படும் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதன் ஊடாக மாத்திரம்தான் இவ்வாறான மோசமான செயற்பாடுகளுக்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைக்கலாம்- என்றார். (எ-66)

கட்டுநாயக்கவில் கைதானவரிடம் விசாரணை

## கோண்டாவில் பகுதியிலிருந்து கைக்குண்டு, வாள்கள் மீட்பு!


யாழ்ப்பாணம், செப். 26
யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபர், கட்டுநாயக்கவில் கைதுசெய்யப்பட்ட நிலையில், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையில், கோண்டாவில் பகுதியில் இருந்து கைக்குண்டும், இரு வாள்களும் மீட்கப்பட்டுள்ளன.
யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு வாள்வெட்டுகள் மற்றும் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர், கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முற்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் கைதானார்.
அவர் யாழ்ப்பாணம் பெருங்குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், கைக்குண்டு ஒன்றையும், இரு வாள்களையும் மீட்டனர்.
சந்தேகநபர் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். இதன்போது, அவரை இரண்டு நாள்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரிப்பதற்கு பொலிஸார் அனுமதி கோரிய நிலையில், நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. (ம-27)



### வவுனியாவில்

## தியாகதீபம் நினைவாக உண்ணாவிரதப்போராட்டம்

வவுனியா, செப்.26
தியாகதீபம் திலீபனின் 38ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு வவுனியாவில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.
தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வவுனியா மாநகரசபை முன்றலில் அமைந்துள்ள பொங்குதமிழ் நினைவுத்தூபியில் அமைக்கப்பட்ட தியாகதீபம் திலீபனின் நினைவுத்திடலில் குறித்த உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்றது. இதில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,மாநகரசபை முதல்வர் சு.காண்டீபன்,நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செ.கஜேந்திரன், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-110)



## திலீபனின் நினைவு சுமந்த ஊர்திக்கு பிரபாகரன் இல்லத்தடியில் அஞ்சலி

யாழ்ப்பாணம்.செப்.26
தியாகதீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு, 'திலீபன் வழியில் வருகிறோம்' எனும்தொனிப்பொருளிலான தியாகதீபம் திலீபனின் நினைவு சுமந்த ஊர்தி, கடந்த செவ்வாய்க்கிழமை, வடமராட்சி வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனது இல்லத்தடியைச் சென்றடைந்தது.
அங்கு சிறுவர் உட்பட பொதுமக்கள் பலரும் சுடரேற்றி, மலர்கள் தூவி திலீபனுக்கு உணர்வு பூர்வ அஞ்சலி செலுத்தினர்.
தியாகதீபம் திலீபன் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினரின் ஏற்பாட்டில், ஊர்திப் பவனி இடம் பெற்றுவருகின்றது. நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத்தூபியடியிலிருந்து பயணத்தை ஆரம்பித்த ஊர்திப்பவனி, மீண்டும் திலீபன் நினைவுத்தூபியடியில் பயணத்தை நிறைவு செய்யும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-66)

## ஆன்மிக உரை

யாழ்ப்பாணம், செப்.26
நவராத்திரியை முன்னிட்டு சிவகுரு ஆதீனத்தில் தினமும் மாலை 6 மணி தொடக்கம் 6.30 மணி வரை ஆன்மிகவுரை ஆதீனமுதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் நிகழ்த்தப்படுகின்றது. இன்று வெள்ளிக்கிழமை "பணியப் பணிய பாவம் அகலும்" நாளை சனிக்கிழமை "பொறுத்தார் பூமி ஆள்வார்" எனும் தொனிப்பொருளில் ஆன்மிக உரைகள் இடம்பெறவுள்ளன. (ச-41-159,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்ணகை அம்மன் வழங்கும்

# ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம் -புங்குடுதீவு

## நவராத்திரி விழா

அம்பாள் அடியார்களே !

22.09.2025 திங்கட்கிழமை அன்று முதல் நவராத்திரி விழா ஆரம்பமாகி 02.10.2025 வியாழக்கிழமை அன்று நிறைவடைகின்றது.

02.10.2025 விஜயதசமி விழா அன்று காலை 9.30 மணிக்கு அம்பாளுக்கு ஸ்நபனாபிஷேகமும் விஷேட பூஜையும் இடம்பெற்று மதியம் 12.00 மணிக்கு உச்சிகால பூஜையைத் தொடர்ந்து வசந்த மண்டபத்தில் வீற்றிருக்கும் எழுந்தருளி அம்பாளுக்கு விசேட தீபாரதனைகளும், பூஜைகளும் இடம்பெற்று பின்னர் அடியார்களுக்கு மகேஸ்வர பூஜையாகிய அன்னதானம் வழங்கப்படும்.

மாலை 3.30 மணிக்கு சாயங்கால பூஜையைத் தொடர்ந்து வசந்தமண்டபத்தில் எழுந்தருளி அம்பாளுக்கு அலங்கார பூஜைகளும், அம்பாள் வீதி உலா வரும் அலங்கார காட்சியும், வாழைவெட்டு (மானம்பூ) வைபவமும் இடம்பெற்று, அம்பாள் இருப்பிடம் வந்ததும் பிராஜசித்த அபிஷேகத்தைத் தொடர்ந்து அடியார்களுக்கு பிரசாதம் வழங்கப்படும்.

நன்றி

ஆலய பரிபாலனசபை

# தமிழரின் மரபுரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்

## ஈ.பி.டி.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம்,செப்.26

ஊழல் அற்ற ஆட்சி, அனைவருக்கும் சமத்துவமான எதிர்காலம் என்ற நம்பிக்கையை மக்கள் மத்தியில் பரப்பிவருகின்ற தற்போதைய அரசாங்கம், தமிழ் மக்கள் சார்ந்த மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கு அவதானம் செலுத்த வேண்டும் என்று ஈ.பி. டி பி. ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் தெரிவித் துள்ளார். யாழ். ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது பாரம்பரியங்களும், தொன்மையும் நிலைத்து நிற்க மரபுரிமைச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும். தொல்லியல் திணைக்கள ஆளணி நிரப்பப்படும்போது, திட்டமிட்ட முறையில் தமிழ் பேசுவோர் புறக்கணிக்கப்படுகின்றனர். இவை, தொல்லியல் திணைக்களத்தில் திட்டமிட்ட நிகழ்ச்சிநிரல் இருப்பதையே வெளிப்படுத்துகின்றது.

அதேவேளை, எமது மரபுரிமைச் சின்னங்களை அழிப்பதில் சில கோடாரிக் காம்புகளும் பின்னணியில் செயற்படுகின்றன. வர்த்தகத்தை வளப்படுத்தும் வர்த்தகர் ஒருவர், மந்திரிமனை அழிவுக்கும் காரணமாக இருக்கின்றார். எனவே சம்பந்தப்பட்ட தரப்புகள் உடன் நடவடிக்கை எடுத்து மரபுரிமைச் சின்னமான மந்திரிமனையைப் பாதுகாக்கவேண்டும் - என்றார். (க-20)

**Restaurant**
**கைமாற்றி வழங்கப்படும்**

நல்லூர் பகுதியில்
இயங்குநிலையிலுள்ள
**Restaurant (உணவகம்)** சகல
விதமான தளபாட வசதிகளுடன்
கைமாற்றி வழங்கப்படவுள்ளது.
ஆர்வமுள்ளவர்கள் மட்டும்
தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு -:
0778864868 / 0759799161

# கண்ணகி வீதியுலா

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகியம்மன் ஆலய நவராத்திரி உற்சவம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி இடம்பெற்றுவருகின்றது. எதிர்வரும் 2ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 2மணிக்கு கண்ணகியம்மன் எழுந்தருளி தெருவீதியூடாக மக்களுக்கு அருள்பாலித்து வட்டு.மத்திய கல்லூரிக்கு அருகாமையிலுள்ள இலுப்பையடிஞான வைரவர் ஆலயத்தில் கன்னி வாழை வெட்டும் வைபவம் இடம்பெறும் என ஆலயப்பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ச-41)

**வேலையாட்கள் தேவை**
தளபாடக் கடை ஒன்றிற்கு வேலை யாட்கள் தேவை.
ஆண், பெண் இருபாலாரும்.
இடம்:- கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.
தொடர்பு: 0777 130 872
(CS 59484) A

**வைபோகம் திருமண சேவை**
**www.vaipokam.com**
விரைவில் திருமணம்
நடைபெற !!
உங்களுக்கான துணையை
நீங்களே தேர்ந்தெடுக்க !!
இப்போதே பதிவு
செய்யுங்கள் !!
தொடர்புகளுக்கு (Whatsapp)
077 923 4501
077 565 2063

# MUNICIPAL COUNCIL, JAFFNA
# INVITATION FOR BIDS
## Procurement of Goods & Services for Jaffna Public Library – Library Digitalization Project
## Source of Fund – Provincial Special Grant

1. The Chairman Regional Procurement Committee (RPC) on behalf of Municipal Council, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders as in the table below:
2. Bidding will be conducted through National Competitive Bidding.
3. Interested eligible bidders may obtain further information from Mayor/Commissioner, Jaffna Municipal Council. TP: 021 222 8874, Fax: 021 222 2334
E-Mail: mcjaffnamailc@yahoo.com office hours from 09:00 hrs. To 15:00 hrs.
4. In these quotations are limited suitable business or company registrations and shall not include black list tenders
5. Serial No 02 & 05 bidders shall also register themselves with the registrar of public contract Sri Lanka, in terms of the public contract Act No 03 of 1987. Additional details are provided in the bidding document.
6. A complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders from the address given below from 26th Sep 2025 until 09th Oct 2025 from 09:00 hrs. to 14:00 hrs. on the submission of a written application and upon a payment of non-refundable fee. The payment method will be paid by cash or bank draft drawn in favor of Commissioner, Jaffna Municipal Council.
7. Bids must be delivered to the address given below on or before 10th Oct 2025 at 11.00 hrs. Bid number must be written on the top of envelop. Late bids will be rejected. Immediately after closing of bids will be opened in the presence of the bidders' repre sentatives' who choose to attend at the address given below. All bids must be accompa nied by a bid security and the validity periods of bid security are given in table below.
8. A pre bid meeting will be held at Jaffna Municipal Council, Point Pedro Road, Jaffna on 3rd oct 2025 at 10:00 hrs., interested bidders may participate in this meeting their own expenses.
9. The address referred to above is Chairman, Procurement Committee, Jaffna Municipal Council, Point Pedro Road, Nallur, Jaffna. The Bid Name & No must be mentioned on the top of the envelop. The bid will be sent in post/ in courier service or shall be deposited in the bid box in the above address.

| S/N | Bid No. | Tittle of the procurement | Estimated Amount (Without VAT) Rs. million | Period of Contract | Bid Validity Period | Bid Security | | Non-refundable fee |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Amount | Required Period | |
| 01 | JMC/PMD/02/ Procurement for Supplying of Library Furniture Items - 2025 | Procurement for Supplying of Library Furniture Items - 2025 | 4.8 | 30 days | 49 days | 70,000.00 | 26.12.2025 | 2,000.00 |
| 02 | JMC/PMD/02/ Procurement for Supplying of IT INFRASTRUCTURE EQUIPMENT - 2025 | Procurement for Supplying of IT INFRASTRUCTURE EQUIPMENT - 2025 | 15.0 | 60 days | 77 days | 150,000.00 | 23.01.2026 | 3,500.00 |
| 03 | JMC/PMD/02/ Procurement for Supplying of DEVELOPMENT AND IMPLEMENTATION OF DIGITAL INFORMATION DISSEMINATION AND PUBLIC ENGAGEMENT SYSTEMS FOR JAFFNA PUBLIC LIBRARY - 2025 | Procurement for Supplying of DEVELOPMENT AND IMPLEMENTATION OF DIGITAL INFORMATION DISSEMINATION AND PUBLIC ENGAGEMENT SYSTEMS FOR JAFFNA PUBLIC LIBRARY - 2025 | 3.0 | 60 days | 49 days | 50,000.00 | 26.12.2025 | 2,000.00 |
| 04 | JMC/PMD/02/ Procurement for Supplying of IMPLEMENTATION OF INTEGRATED LIBRARY AND DIGITAL DOCUMENT MANAGEMENT SYSTEM FOR JAFFNA PUBLIC LIBRARY - 2025 | Procurement for Supplying of IMPLEMENTATION OF INTEGRATED LIBRARY AND DIGITAL DOCUMENT MANAGEMENT SYSTEM FOR JAFFNA PUBLIC LIBRARY - 2025 | 3.0 | 60 days | 49 days | 50,000.00 | 26.12.2025 | 2,000.00 |
| 05 | JMC/PMD/02/ Procurement for Supplying of IMPLEMENTATION OF INCLUSIVE DIGITAL AND ASSISTIVE TECHNOLOGY SECTION AT THE JAFFNA PUBLIC LIBRARY - 2025 | Procurement for Supplying of IMPLEMENTATION OF INCLUSIVE DIGITAL AND ASSISTIVE TECHNOLOGY SECTION AT THE JAFFNA PUBLIC LIBRARY - 2025 | 9.0 | 60 days | 77 days | 100,000.00 | 23.01.2026 | 3,500.00 |

Chairman,
Regional Procurement Committee,
Municipal Council, Point Pedro Road, Nallur, Jaffna.
26.09.2025

**ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்**
**ஸ்ரீமத் சிதம்பரேஸ்வர சுவாமி திருக்கோயில்**
**கொல்லங்கலட்டி தெல்லிப்பழை**

## பொதுக்கூட்டம்

**கொல்லங்கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய புனருத்தாரண சபைப் பொதுக்கூட்டம்.**

திகதி : 12.10.2025
காலம் : ஞாயிற்றுக்கிழமை
இடம் : கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலய முன்றல்
நேரம் : காலை 09.30

பொதுக்கூட்டத்திற்கு ஆலய உபயகாரர்கள், தொண்டர்கள், அடியார்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ச.பாமினி
செயலாளர்
புனருத்தாரணசபை
ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்
கொல்லங்கலட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு 2026 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் சந்தைகள், இறைச்சிக் கடைகள், முல்லைத்தீவு கடற்கரை சிற்றுண்டிச்சாலை, கருவாட்டுக்கடைகள் என்பவற்றினை 2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31ம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 26.09.2025 தொடக்கம் 09.10.2025 , 2.30 மணி வரை (கடமை நாட்களில்)
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 10.10.2025 முற்பகல் 10 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 10.10.2025 முற்பகல் 10.30.

1. கேள்விப்பத்திரத்தினை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை தவிசாளர் கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு. என்னும் முகவரிக்கு முத்திரை இட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் 10.10.2025 முற்பகல் 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 10.10.2025 முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட பிரதேச வதிவிடச்சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் நேரடியாக கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமூகமளிக்க வேண்டும். கரைதுறைப்பற்று பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்பட மாட்டாது.
4. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வி தொடர்பிலும் இறுதி முடிவெடுப்பது தொடர்பில் கேள்விச்சபைக்கே பூரண அதிகாரமுண்டு.
5. எம்மால் நிர்ணயிக்கப்படும் இடத்தில் மாடுகள், ஆடுகள் கட்டப்பட்டு அனுமதிக்கப்பட்ட கொல் களத்திலேயே இறைச்சிக்குரிய மாடுகள், ஆடுகள் அறுக்கப்பட வேண்டும்.
6. எமது சபையின் சந்தைகள், இறைச்சிக்கடைகளிலிருந்து 1KM தூரத்திற்குட்பட்ட கடைகளில் அல்லது வேறு எவ்விடத்திலும் மரக்கறிகள், இறைச்சி விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.
7. ஒவ்வொரு கேள்விப்பத்திர வகைகளுக்கும் அதிகூடிய கேள்வித்தொகை கூறும் கேள்விதாரருக்கு சபையுடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் மீள் கேள்வி அறிவித்தல் செய்யப்படும்.
8. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து 03 நாட்களுக்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் குறிப்பிட்ட கேள்வித் தொகையின் 1/3 பகுதியை பாதுகாப்பு வைப்பாக செலுத்தி குத்தகை ஒப்பந்த உடன்படிக்கை பூர்த்தி செய்தல் வேண்டும்.
9. சந்தைகள், இறைச்சிக் கடைகள், முல்லைத்தீவு கடற்கரை சிற்றுண்டிச்சாலை, கருவாட்டுக்கடைகள் என்பவற்றிற்கு விண்ணப்பம் பெறுபவர்கள் முன்பு சபையின் கடை நடாத்தியவராயின் எதுவித நிலுவையும் இல்லை என்பதனை உப அலுவலக பொறுப்பதிகாரியால் உறுதிப்படுத்திய கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.
10. மாத வாடகை யாவும் விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் மாற்றத்தை ஏற்படுத்தும்.
11. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை 021 -2290001 என்ற தலைமை அலுவலக பிரதேசசபையின் தொலைபேசி மூலம் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | பொதுசந்தை குத்தகை மற்றும் இறைச்சிக்கடை விபரம் | கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NB) நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூபா | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT,NB) நீங்கலாக | கடைக்குரிய மாதாந்த வாடகைத் தொகை ரூபா |
|---|---|---|---|---|---|
| | முல்லைத்தீவு உப அலுவலகம் | | | | |
| 1 | முல்லைத்தீவு கோழியிறைச்சிக் கடை | 2,000.00 | 19,500.00 | 1,932,700.00 | 5,000.00 |
| 2 | முல்லைத்தீவு மாட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 21,000.00 | 2,080,100.00 | 5,000.00 |
| 3 | முல்லைத்தீவு ஆட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 3,500.00 | 348,496.50 | 5,000.00 |
| 4 | முல்லைத்தீவு கருவாட்டுக் கடை | 2,000.00 | 1,000.00 | 89,199.00 | 5,000.00 |
| 5 | சிலாவத்தை கோழி இறைச்சிக் கடை | 2,000.00 | 5,000.00 | 500,500.00 | - |
| 6 | சிலாவத்தை மாட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 13,500.00 | 1,337,050.00 | - |
| 7 | முல்லைத்தீவு பொதுச்சந்தை | 2,000.00 | 12,000.00 | 1,201,475.00 | - |
| 8 | முல்லைத்தீவு கடற்கரை சிறுவர் பூங்கா | 2,000.00 | 5,500.00 | 522,830.00 | 4,500.00 |
| 9 | சிலாவத்தை பொதுச்சந்தை | 2,000.00 | 1,500.00 | 134,198.90 | - |
| | முள்ளியவளை உப அலுவலகம் | | | | - |
| 10 | தண்ணீரூற்று கோழியிறைச்சிக் கடை | 2,000.00 | 24,000.00 | 2,337,599.00 | 2,700.00 |
| 11 | தண்ணீரூற்று மாட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 32,000.00 | 3,113,000.00 | 2,700.00 |
| 12 | தண்ணீரூற்று ஆட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 7,200.00 | 717,700.50 | 2,700.00 |
| 13 | தண்ணீரூற்று கருவாட்டுக்கடை | 2,000.00 | 1,000.00 | 25,245.99 | 2,700.00 |
| 14 | முள்ளியவளை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 8,000.00 | 791,450.00 | 3,150.00 |
| 15 | முள்ளியவளை மாட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 15,000.00 | 1,485,000.00 | 3,150.00 |
| 16 | வற்றாப்பளை கோழி இறைச்சிக் கடை | 2,000.00 | 1,500.00 | 139,700.00 | 1,750.00 |
| 17 | கேப்பாபிலவு கோழியிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 17,050.00 | 1,500.00 |
| 18 | கேப்பாபிலவு மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,600.00 | 154,000.00 | 1,500.00 |
| 19 | தண்ணீரூற்று பொதுச்சந்தை | 2,000.00 | 34,000.00 | 3,366,990.00 | - |
| 20 | முள்ளியவளை பொதுச்சந்தை | 2,000.00 | 20,000.00 | 1,991,000.00 | - |
| 21 | வற்றாப்பளை பொதுச்சந்தை | 2,000.00 | 1,000.00 | 41,800.00 | - |
| 22 | கேப்பாபிலவு பொதுச்சந்தை | 2,000.00 | 1,000.00 | 5,170.00 | - |
| | செம்மலை உப அலுவலகம் | | | | |
| 23 | செம்மலை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 9,130.00 | 1,000.00 |
| 24 | அளம்பில் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 5,000.00 | 433,529.25 | 2,000.00 |
| 25 | அளம்பில் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 94,600.00 | 2,000.00 |
| 26 | குமுளமுனை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 49,500.00 | 1,750.00 |
| 27 | குமுளமுனை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,500.00 | 123,212.43 | 1,750.00 |
| 28 | செம்மலை பொதுச்சந்தை | 2,000.00 | 1,000.00 | 26,950.00 | - |
| 29 | அளம்பில் பொதுச்சந்தை | 2,000.00 | 1,000.00 | 10,890.00 | - |
| 30 | குமுளமுனை பொதுச்சந்தை | 2,000.00 | 2,500.00 | 231,550.00 | - |
| | கொக்கிளாய் உப அலுவலகம் | | | | |
| 31 | கொக்கிளாய் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 5,500.00 | 521,191.00 | 1,000.00 |
| 32 | கொக்கிளாய் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 6,500.00 | 623,810.00 | 1,000.00 |
| | முள்ளிவாய்க்கால் உப அலுவலகம் | | | | |
| 33 | முள்ளிவாய்க்கால் மாட்டிறைச்சிகடை | 2,000.00 | 1,500.00 | 113,850.00 | 1,000.00 |
| 34 | முள்ளிவாய்க்கால் கோழியிறைச்சிகடை | 2,000.00 | 1,500.00 | 50,600.00 | 1,000.00 |
| 35 | புதுமாத்தளன் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 46,200.00 | - |
| 36 | முள்ளிவாய்க்கால் பொது சந்தை | 2,000.00 | 1,000.00 | 2,806.65 | |

தவிசாளர்,
கரைதுறைப்பற்று பிரதேச சபை,
முல்லைத்தீவு.
2025.09.26

(CR/6337) 1-1

# விளம்பரங்கள் காட்சிப்படுத்த வலி.மேற்கில் தனியிடங்கள்!

## பிரதேசசபை நடவடிக்கை

யாழ்ப்பாணம்,செப்.26

விளம்பரங்களைக் காட்சிப்படுத்துவதற்காக வலிகாமம் மேற்குப் பிரதேசசபை 7பொது இடங்களை ஒதுக்கியுள்ளது. தனியார் நிறுவனங்களின் விளம்பரங்கள், இறப்பு அறிவித்தல்கள், கோவில்களின் விஞ்ஞாபனங்கள் மற்றும் பொது அறிவித்தல்கள் என்பன கட்டுப்பாடற்று வீடுகளின் மதில் சுவர்கள், பாடசாலைகளின் மதில் சுவர்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களின் மதில் சுவர்களிலும் ஒட்டப்படுகின்றன.

இவ்வாறு விளம்பரங்கள் ஒட்டப்படுவதால், சுவர்கள் அழுக்காவது குறித்து பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் வலிகாமம் மேற்குப் பிரதேசசபை முன்மாதிரியாக விளம்பரங்களைக் காட்சிப்படுத்துவதற்குத் தனியான பொது இடங்களை அறிவித்துள்ளது. அதன்படி சுழிபுரம் சந்தி, வழக்கம்பரை அம்மன் கோவில் அருகாமை, சித்தங்கேணிச் சந்தி, சங்கரத்தைச் சந்தி அருகாமை, வட்டுக்கோட்டை, அராலி உப அலுவலகத்துக்கு அருகாமை, அராலி ஐயனார் கோவில் அருகாமை போன்ற இடங்களில் விளம்பரங்களைக் காட்சிப்படுத்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

(க-27)



# புதிய நெல் வர்க்கச்செய்கை கிளிநொச்சியில் அறுவடை!

கிளிநொச்சி,செப்.26

கிளிநொச்சி மாவட்டத்தில் வறட்சியான காலநிலைக்குச்செய்கை மேற்கொள்ளக்கூடிய புதிய நெல் வர்க்கமான பிஜி-377 (வெள்ளை) நெல்லில் பரீட்சாத்தமாகச் செய்கை மேற்கொள்ளப்பட்டு அதன் அறுவடை விழா புளியம்பொக்கணை பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

புளியம்பொக்கணைப் பகுதி விவசாயப் போதனாசிரியர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டப் பிரதி விவசாயப்பணிப்பாளர் வி.சோதி லட்சுமி கலந்துகொண்டார்.

நிகழ்வில் கண்டாவளை கமநலசேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர்,பாடவிதான உத்தியோகத்தர் க.பிரதீபன், விவசாயப் போதனாசிரியர்கள், கமக்கார அமைப்புப் பிரதிநிதிகள், பொது அமைப்பு சார்ந்தோர் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ச-113)

# ஒக்ரோபர் மாத சுற்றுலா இலங்கைக்கு முதலிடம்

## பிரிட்டன் இதழ் அங்கீகாரம்

கொழும்பு, செப். 26

பிரித்தானிய சுற்றுலாத்துறை இதழான 'டைம் அவுட்', ஒக்ரோபர் மாதத்தில் சுற்றுலா செல்வதற்கு உலகின் மிகச் சிறந்த நாடாக இலங்கையை அறிவித்துள்ளது.

இலங்கையின் வெப்பமண்டல காலநிலை, பண்பாடு, பாரம்பரியம் மற்றும் இயற்கை அழகு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டே இலங்கையை உலகின் மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாக அறிவித்துள்ளதாக 'ரைம் அவுட்' இதழ் குறிப்பிட்டுள்ளது. இரண்டாவது இடத்தில் துருக்கி பெயரிடப்பட்டுள்ளது.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19 . 07 . 1945



மறைவு
07 . 10 . 2024

கடந்த (07.10.2024) திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

## தங்கராசா திலகவதி

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (26.09.2025) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

ஆண்டொன்று ஆனதம்மா ஆறவில்லை எம்துயரம்
மீண்டு என்று மேனியில் வந்து பிறப்பீர்கள் அம்மா
வேண்டுகின்றோம் நாங்கள் இங்கு
வேதனையில் வாடுகின்றோம்!
கூண்டை விட்டு கிளி பறந்தால்
கூண்டுக்கே வந்து விடும் - உங்கள்
கூண்டு இங்கே இல்லையம்மா !
வேண்டுகின்றோம் மீண்டும் வந்து பிறந்திடுங்கள்!
காத்திருப்போம் உங்களுக்காய்
கடவுளை நாம் வேண்டுகின்றோம்!
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

ஆசிரியர் வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்


(CS/59483) J-1


# வெளிவிவகார அமைச்சர்கள் அமெரிக்காவில் சந்திப்பு

இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை அமெரிக்காவில் சந்தித்துள்ளார். இதுதொடர்பில் அவர் தனது எக்ஸ் தளத்தில், "ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்தில், இந்திய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்தேன். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வலுவான நட்பு மற்றும் நெருக்கமான ஒத்துழைப்பை மீண்டும் அவர் உறுதிப்படுத்தினார்" என்று பதிவிட்டுள்ளார். அத்துடன் அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதி வெளியுறவுச் செயலாளர் எலிசன் ஹூக்கரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்க, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன், அமைச்சர் விஜித ஹேரத்தும் அமெரிக்கா சென்றுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் மற்றும் பல உலகத் தலைவர்களுடனும் ஜனாதிபதி இருதரப்புக் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார். (க-இ)


# மரண அறிவித்தல்

பிறப்பு
24 . 04 . 1955



இறப்பு
2508 . 09 . 2025

## சின்னத்தம்பி சண்முகதாஸ்

(தெல்லிப்பழை ஓய்வு பெற்ற பல நோக்கு சங்க ஊழியர்)

கல்லூரி வீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நல்லூர் நிக்கலஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சண்முகதாஸ் அவர்கள் (25.09.2025) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ராசலிங்கம்-சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மருமகனும், லிங்கேந்திரராணியின் அன்புக் கணவரும், தட்சனன், சிவதாஸ், பவிதா, றஜிதா, றஜிதாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பராணி, காலஞ்சென்ற சஞ்சீவன் ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்சிகா, தமிழினி, தமிழ்க்கதிர், ஆதவன் ஆகியோரின் பாசமிகு பேரனும், மங்கையர்கரசி, அற்புதராணி, காலஞ்சென்ற மனோகரதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (26.09.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும் என்பதை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்



# மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 09 . 1948



மறைவு
23 . 09 . 2025

## சண்முகலிங்கம் சந்திராதேவி

இணுவில் தெற்கை பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கு மற்றும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சண்முகலிங்கம் சந்திராதேவி 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று கொழும்பில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான திருவிளங்கம் - இரத்தினம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - லில்லிமலர் தம்பதியினரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சண்முகலிங்கத்தின் அன்பு மனைவியும், பிரசாந்த், துஷித்தா, ரஜீவ்சாந்த் ஆகியோரின் அருமைத் தாயாரும், சுமித்திரா, கோகுலன், சத்தியா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், திவ்யேஷ், ரிஷிகேஷ் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், யோகராஜா, மாலினிதேவி, ஸ்ரீஸ்கந்தராஜா, சகலகலாதேவி, கௌரிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், விஜயலக்சுமி, விசாகரட்ணம், சுதாகரன், [illegible], மோகன், சுந்தரலிங்கம், சிவனேசலிங்கம், தேவசேனா, காலஞ்சென்ற இந்திரசேனா மற்றும் விஜயசேனா, அமிர்தலிங்கம், பதுமசேனா ஆகியோரின் அன்பு மைத்துனியும், மண்டலநாயகி, பாமதி, காலஞ்சென்றவர்களான உருத்திராங்கதன், கனகநாயகம் மற்றும் சுந்தரலிங்கம், லோகேஸ்வரி, அருள்நேசன், ஆகியோரின் பாசமிகு சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09:00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்


வன்னியசிங்கம் வீதி,
இணுவில் தெற்கு, இணுவில்.

(CS/59488) JK



# மரண அறிவித்தல்

தோற்றம்
17 . 09 . 1928



மறைவு
22 . 09 . 2025

## சின்னத்தங்கம் யாதவராயர்

நெடுந்தீவு மத்தி தண்டக்காரன் வளவைப் பிறப்பிடமாகவும், லண்டன், கனடா, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருவாட்டி சின்னத்தங்கம் யாதவராயர் அவர்கள் கடந்த (22.09.2025) திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - வேலாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இளையதம்பி யாதவராயர் (ஓய்வுபெற்ற தலைமை அசிரியர், திடீர் மரணவிசாரணை அதிகாரி - நெடுந்தீவு) அவர்களின் அன்பு மனைவியும், சகுந்தலாதேவி, பாலச்சந்திரன், குலேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கோபாலகிருஷ்ணன், இசைஞானவதி, ராணிதேவி ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், சிதம்பரப்பிள்ளை, நாகமுத்து (தும்பையா), கணபதிப்பிள்ளை, கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராமாசிப்பிள்ளை, பார்வதி, கமலாம்பிகை, விசாலாட்சி, கண்மணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கோசலா - அதிரதன், கோசகன் - ஜானகி, தயாளன் - பாறு, விமலன், ஜனனி - மதன்ராஜ், தினேஷ்குமார் - சுஜீவா, யாழினி - கலைக்குமார், கமலினி - ரவீந்திரா, ஜனகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அரன், காயா, றியா, செரீன், ஜெயன், டிலானி, காவியா, கிருத்திக், ஜனிசா, லக்ஷா, நேகா, டியா, நாளா, மாயா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 22/1, கச்சேரி ஒழுங்கை, யாழ்ப்பாணம் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நாளைமறுதினம் (28.09.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

'துவாரகை'
22/1 கச்சேரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
சு.கோபாலகிருஷ்ணன் - 076 266 9992

(CS/59485) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணவுக்கு எதிரான பிரேரணையை நிராகரித்த காரணத்தைக் கூறுங்கள்!

## வலியுறுத்துகின்றார் எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு, செப்.26
பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக முன்வைக்கப் பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிராகரித்தமைக்குரிய காரணங்களை சபாநாயகர் சபையில் முன்வைக்கவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிட்ட சஜித், இதுதொடர்பில் தெரிவித்துள்ளதாவது:-
பாதுகாப்புப் பிரதி அமைச்சருடன் எமக்கு தனிப்பட்ட ரீதியில் எவ்விதப் பிரச்சினையும் கிடையாது. அவர் தான் தற்போது பதில் பாதுகாப்பு அமைச்சராகவும் செயற்படுகின்றார். அவருக்கு எதிராக வழங்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை நிராகரிக்கப்பட்டமைக்குரிய காரணம் என்ன? அவற்றை உரியவகையில் சபையில் முன்வைக்க வேண்டும். இதுதொடர்பான சட்டமா அதிபரின் அறிக்கை மற்றும் நாடாளுமன்ற செயலாளர் குழாமின் அறிக்கை என்பனவும் முன்வைக்கப்படவேண்டும் - என்றார். (எ-44)



# திலீபன் நினைவில் வினாவிடைப் போட்டி

யாழ்ப்பாணம், செப்.26
தியாகதீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திலீபனின் வரலாற்றை இளைய தலைமுறைக்குக் கொண்டுசெல்லும் நோக்குடன் தியாகதீபம் திலீபன் ஆவணக் காட்சியகத்தினர் மாணவர்கள் மத்தியில் நடத்திய தியாகதீபம் திலீபன் தொடர்பான வினாவிடை எழுத்துப் பரீட்சை போட்டி நேற்று முன்தினம் புதன்கிழமை நல்லூர் தியாகதீபம் திலீபனின் ஆவணக் காட்சியகத்தில் நடைபெற்றது.
போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கான பரிசளிப்பு போட்டியைத் தொடர்ந்து இடம்பெற்றது. பங்குபற்றிய மாணவர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ் வழங்கிவைக்கப்பட்டதுடன் ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பெற்ற மாணவர்கள் திலீபனின் உருவப்படத்துடன்கூடிய பதக்கமும் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர்.
இதேவேளை, பலரது வேண்டுகோளுக்கமைய இன்று வெள்ளிக்கிழமையும் மாலை 6 மணியளவில் நல்லூர் தியாகதீபம் திலீபனின் ஆவணக் காட்சியகத்தில் இதே பிரிவு அடிப்படையில் வினாவிடை எழுத்துப் பரீட்சைப் போட்டிகள் நடைபெறுமென நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-41-66)


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 05 . 04 . 1933



மறைவு 24 . 09 . 2025

எமது கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளரும் விரிவுரையாளர் கழகப் பொருளாளருமான
திரு. **சின்னையா மனோகரன்** அவர்களின் அன்புத் தாயார்
**அமரர் சின்னையா பொன்னம்மா**
அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !
**விரிவுரையாளர் கழகம்**
**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை**


# ஆலோசனைக் கூட்டம்

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின் 75 வருட நிறைவிழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வடக்கு வீதியிலுள்ள மாவைக்கந்தன் அன்னதான சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் முன்னாள் பணியாளர்கள் அனைவரையும் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (க-இ)


## மரண அறிவித்தல்

மலர்வு 23 . 03 . 1942



உதிர்வு 25 . 09 . 2025

**திருமதி கந்தையா சிவமலர்**

புத்தூரைப் பிறப்பிடமாகவும், மறவன்புலோவை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா சிவமலர் அவர்கள் நேற்று (25.09.2025) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா (மறவன்புலோ) அவர்களின் அன்பு மனைவியும், சத்தீஸ்வரி (கனடா), கமலேஸ்வரி (கைதடி), சிவனேஸ்வரி (சுவிஸ்), ஞானேஸ்வரி (லண்டன்), ஸ்ரீகணேசன் (ஆசிரிய ஆலோசகர் வலயக்கல்வி அலுவலகம்-தென்மராட்சி), ஸ்ரீகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரகுதேவன் (கனடா), தெய்வயோகநாதன் (கைதடி), கோபிராஸ் (சுவிஸ்), கருணாகரன் (லண்டன்), சிவ[illegible]பதா (விரிவுரையாளர் -PDCT நெல்லியடி), சத்தியா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், அஜந்தன், நிஷாந்தினி, தர்ஷிகா (கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்-பச்சிலைப்பள்ளி), வாகினி, பவதாரணி, சாருஜா, அகிஷன், அனுராஜ், அபிநயன், அருள்வாரணன், கீர்த்தன்ராஜ், அமீரா, ஜனகன், ஸ்ரீநிஷா, லிறிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் சிவஞ்சோதி, பரஞ்சோதி, திருமலர், சிவஞானமலர், சிவேந்திரமலர், சிவனேசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காசிப்பிள்ளை மற்றும் காலஞ்சென்றவர்களான கனகசபை, சதாசிவம், நாகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (26.09.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சாவகச்சேரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.06, ஆடியம்பிட்டி ஒழுங்கை,**
**சாவகச்சேரி.**

தகவல்:
குடும்பத்தினர்
**077 766 6654**


# பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் நவீன சமையல்கூடம் திறப்பு

யாழ்ப்பாணம், செப்.26
பருத்தித்துறை தலைமைப் பொலிஸ் நிலை யத்துக்கான நவீன வசதிகளுடன் கூடிய சமையலறை கூடம் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக்.சீ.தனபாலவால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.
நிகழ்வில் காங்கேசன்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அனைத்துப் பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர் . (ச-100)



# போதைப்பொருள் தகவலளிக்க தொலைபேசி எண்கள் அறிமுகம்!

கொழும்பு,செப்.26
போதைப்பொருள் பற்றிய தகவல்களை வழங்க பொதுமக்களுக்கு புதிய தொலைபேசி எண்களைப் பொலிஸ் தலைமையகம் அறிமுகப்படுத்தியுள்ளது.
நாட்டின் பல்வேறு பகுதிகளில் பரவலாகக் காணப்படும் ஹெராய்ன், ஐஸ், கொக்கைன் மற்றும் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்கள் பற்றிய தகவல்களை சம்பந்தப்பட்ட மாகாணத்துக்குப் பொறுப்பான மூத்த டி.ஐ.ஜி.யின் அலைபேசி எண்ணை நேரடியாக அழைப்பதன் மூலம் வழங்கலாம்.

| | | |
|---|---|---|
| மேல் மாகாணம் - , | சஞ்சீவ தர்மரத்ன | 0718591991 |
| தென் மாகாணம் | தகித்சிறி ஜெயலத் | 0718591992 |
| ஊவா மாகாணம் | மகேஷ் சேனநாயக்க | 0718592642 |
| சப்ரகமுவ மாகாணம் | மஹிந்த குணரத்ன | 0718592618 |
| வடமேற்கு மாகாணம் | அஜித் ரோஹண | 0718592600 |
| மத்திய மாகாணம் | லலித் பத்திநாயக்க | 0718591985 |
| வடமத்திய மாகாணம் | புத்திக சிறிவர்தன | 0718592645 |
| வடக்கு மாகாணம் | டி.சி.ஏ. தனபால | 0718592644 |
| கிழக்கு மாகாணம் | வருண ஜெயசுந்தர | 0718592640 |

வழங்கப்பட்ட தகவல்களின் இரகசியத்தன்மையைப் பாதுகாக்கும் அதே வேளையில் தேவையான சோதனைகள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வது உட்பட மேலும் சட்டநடவடிக்கைகளை உடன் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாழையடி...

அண்மைய நாள்களாக கடும் காற்றுடனான காலநிலை தாழையடியில் நிலவுகின்றது. அத்துடன் கடற்கொந்தளிப்பும் ஆபத்தான மட்டத்தை அடைந்துள்ளது. இவ்வாறான காரணங்களைக் கருத்திற்கொண்டே கடலுக்குள் இறங்குவதைத் தவிர்க்குமாறும், கடல்விளையாட்டுகளில் ஈடுபடவேண்டாம் என்றும் வடமராட்சி கிழக்கு கடற்றொழில் கூட்டுறவு சங்கங்களில் சமாசத்தால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (அ-ம-27)

## உணவுத்...

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தின் முதல் நாளான நேற்று தியாகதீபம் திலீபனின் உருவப் படத்துக்கு முன்பாகச் சுடரேற்றி, அகவணக்கம் செலுத்தப்பட்டு அதனைத் தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது. நேற்றைய ஆரம்பநாள் போராட்டத்தில் வடக்கின் 5 மாவட்டங்களையும் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், குரலற்றவர்களின் குரல் அமைப்பினர், போராளிகள் நலன்புரிச் சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இந்த சுழற்சிமுறை உணவுத் தவிர்ப்புப் போராட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிவரை இரவு, பகலாகத் தொடர்ச்சியாக முன்னெடுக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-26-20)

## இராணுவத்தை...

வேற்றப்பட்டுள்ளது. துணுக்காய் பிரதேச சபையின் 3ஆவது அமர்வு தவிசாளர் கனகரத்தினம் செந்தூரன் தலைமையில் பிரதேச சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது, பிரதேசசபை உறுப்பினர் சுயன்சனால் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

இதன்போது, துயிலுமில்ல வளாகம் அமைந்துள்ள காணியில் மக்களின் காணிகளும் உள்ளடங்குகின்றன என்றும், இதுதொடர்பில் 2017ஆம் ஆண்டு அப்போதைய ஆளுநரிடம் மாற்றுக் காணிகள் தொடர்பான கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகவும் உறுப்பினர் செல்வநாயகம் ரஜீவன் சுட்டிக்காட்டினார்.

இதையடுத்து கருத்துத் தெரிவித்த தவிசாளர் கனகரத்தினம் செந்தூரன், துயிலுமில்லம் அமைந்துள்ள இடம் புனித பிரதேசமாக மாற்றப்படவேண்டும் என்பதில் பொதுவான உடன்பாடு உள்ளது. போரிலே இறந்தவர்களை மதிக்கின்ற பண்பாடு எங்களுடையது. எனவே, உரிய நடைமுறைகளின் ஊடாக துயிலுமில்லக் காணியை புனித பகுதியாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

இதைத் தொடர்ந்து, முல்லைத்தீவு துணுக்காய் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் இருந்து இராணுவம் வெளியேற்றப்படவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (அ-ம-35)

## சுதந்திர...

யின் 80ஆவது அமர்வில் ஜனாதிபதி அநுர மேலும் தெரிவித்ததாவது:-

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக யுத்தத்தின் கசப்பான அனுபவத்தை அனுபவித்த ஒரு நாடாக, அதன் அழிவை நாம் நன்கு அறிவோம். யுத்தத்தால் உயிரிழந்த ஆயிரக்கணக்கானவர்களின் நினைவிடங்களுக்கு வரும், அவர்களின் பெற்றோர், குழந்தைகள் மற்றும் மனைவியர் எழுப்பும் வேதனையான வேண்டுகோள்களைப் பார்க்கும் எவரும், யுத்தத்தைப் பற்றி கனவு காணக்கூட தயங்குகிறார்கள். அந்த வேதனையான காட்சியை நாம் நம் இரு கண்களால் பார்த்திருக்கின்றோம். மில்லியன் கணக்கான மக்களின் துன்பத்தை முடிவுக்குக் கொண்டுவருவதில் சர்வதேசம் பல தடவைகள் தோல்வியடைந்துள்ளது. பெரும்பாலும் பார்வையாளர்களாகவே இருந்துள்ளது. குழந்தைகள் மற்றும் அப்பாவிப் பொதுமக்களின் வாழ்க்கையை ஒரு கால்பந்தாட்டமாக மாற்றுவது சந்தர்ப்பவாத அதிகார அரசியலின் துயரமாகும். மற்றவர்களின் வாழ்க்கையை தங்கள் அதிகாரத்தை அதிகரிக்க செல்வாக்கு செலுத்தவும் ஒடுக்கவும் எவருக்கும் உரிமையில்லை. ஆட்சியாளர்களின் பங்கு உயிர்களை அழிப்பது அன்றி, உயிர்களைப் பாதுகாப்பதாகும்.

காஸாப் பகுதியில் நடந்து வரும் கொடூரமான பேரழிவு எங்களுக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்துகிறது. குறிப்பாக, காஸாப் பகுதி ஒரு வேதனையான மற்றும் சோகமான திறந்தவெளி சிறைச்சாலையாக மாறியுள்ளது. அப்பாவிக் குழந்தைகள் மற்றும் பொதுமக்களின் அவலக் குரல்கள் நாலாபக்கமும் கேட்கின்றன. ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஏனைய அனைத்துத் தரப்பினர்களின் உடன்பாட்டின் படி, இரு தரப்பினரும் உடனடியாக போர்நிறுத்தம் செய்யவேண்டும். அனைத்து மனிதாபிமான உதவிகளையும் தடையின்றி வழங்கவேண்டும்.

1967ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின்படி ஒரு நியாயமான மற்றும் நீடித்த தீர்வைத் தேடுவதில் நாம் இணைய வேண்டும். அர்த்தமற்ற போர் காரணமாக உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்களின் வேதனைக்கு முன்பாக வெறும் பார்வையாளராக இருப்பதை நாம் விரும்பவில்லை. உலகைப் பாதிக்கும் யுத்த மோதல்களுக்கு மத மற்றும் இனவாதம் பாரதூரமான காரணிகளாக உள்ளன - என்றார். (அ-ம)

## அனைத்துப்...

மும் பன்மைத்துவம் கொண்டதாக உள்ளது - இவ்வாறு ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 80 ஆவது அமர்வுகள் அமெரிக்காவில் நடைபெற்று வருகின்றன. இதில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று உரையாற்றினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வரலாற்று முக்கியமான தேர்தலில், இலங்கை மக்கள் பல நூற்றாண்டுகளாக தங்கள் மனதில் இருந்த ஒரு கனவுக்காக தீர்மானம் எடுத்தார்கள் என்பதை நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். இதன் விளைவாக நாட்டின் பன்முகத்தன்மை இன்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து பிரஜைகளுக்கும் சம உரிமைகள் மற்றும் வாய்ப்புகளை வழங்குவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை நாங்கள் காத்திரமாகச் செயற்படுத்துள்ளோம்.

அதேபோன்று மக்கள் பிரதிநிதிகள் என்பது பொதுமக்களுக்காக சேவையாற்றும் ஊழியர்கள் அன்றி தேவையற்ற சலுகைகளைப் பெறுபவர்கள் அல்ல என்பதற்கு நாங்கள் ஒரு முன்மாதிரி காட்டியுள்ளோம். மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பு நாட்டையும் மக்களையும் மேம்படுத்துவதாக இருக்கவேண்டும், தங்களைத் தாங்களே வளர்த்துக் கொள்வது அல்ல என்று நாங்கள் கருதுகிறோம். கல்வி மற்றும் சுகாதாரம் குறித்து நாங்கள் அதிக கவனம் செலுத்தியுள்ளோம். அவை அனைத்தையும் படிப்படியாக வென்று வருகிறோம்.

என் மதிப்புக்குரிய தலைவர்களே, நாங்கள் ஒவ்வொரு நாட்டின் பிரதிநிதிகள். நாங்கள் எடுக்கும் தீர்மானம் ஏதோவொரு தரப்பை பாதிக்கின்றது. அழிவைத் தேர்ந்தெடுப்பதல்ல பாதுகாப்பை வழங்குவதே தலைமைத்துவம் என்று நான் கருதுகின்றேன்.

ஆயுதங்கள் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக, மனித நாகரிகத்தின் மதிப்புகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனுக்குள் நாம் பிரவேசிக்க வேண்டும். மில்லியன் கணக்கான குழந்தைகள் பசியால் இறக்கும் உலகில், நாம் பில்லியன் கணக்கான பணத்தை ஆயுதங்களுக்காக செலவிடுகிறோம். சரியான சுகாதார வசதிகள் இல்லாமல் மில்லியன் கணக்கான மக்கள் மரணத்தின் பாதையைத் தேர்ந்தெடுக்கும்போது, அர்த்தமற்ற போர்களுக்கு பில்லியன்களை செலவிடுகிறோம்.

இலட்சக் கணக்கான குழந்தைகள் கல்வி எனும் சிறகுகள் கிடைக்காமல் பெருமூச்சு விடும்போது, நாம் மில்லியன் கணக்கில் நில ஆக்கிரமிப்புகளுக்கு செலவிடுகிறோம். உண்மையில், இந்த உலகில் உள்ள ஒவ்வொரு அங்குல நிலத்தையும் அமைதி எனும் குடியேற்றமாக மாற்ற முடிந்தால், அந்த உலகம் ஓர் அற்புதமான உலகமாக மாறும் என்று நான் நம்புகிறேன். இந்த மாநாட்டில் இணைந்த நாம் அனைவரும் உலக சமாதான குடியேற்றங்களை உருவாக்கும் உன்னத சமாதான யாத்திரிகர்களாக மாற வேண்டும் என்று நான் அழைக்கின்றேன் - என்றார். (அ-ம)

## கேபிள்...

உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் இருவர் வெளிநாட்டுப் பிரஜைகள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேபிள் கார் அறுந்து வீழ்ந்தபோது, அதில் 13 பிக்குகள் இருந்துள்ளனர். உயிரிழந்தவர்களைத் தவிர, ஏனைய ஆறு பேரும் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு குருணாகலை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் உயிரிழந்த பிக்குகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் வைத்து தனது இரங்கலைத் தெரிவித்தார். (அ-ம)

## டிப்பருக்குள்...

ஜதுஸ் (வயது-20) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார். விபத்துத் தொடர்பில் தெரியவருவதாவது:-

சாவகச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற டிப்பரை, அதே திசையில் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் முந்திச் செல்வதற்கு முற்பட்டபோது, எதிரே வந்த இளைஞரின் மோட்டார் சைக்கிளுடன் நேருக்குநேர் மோதுண்டுள்ளார். இரு மோட்டார்சைக்கிள்களும் மோதிய வேகத்தில், அந்த இளைஞர் அருகில் பயணித்த டிப்பர் மீது தூக்கி வீசப்பட்டு, வீதியில் வீழ்ந்துள்ளார். சம்பவ இடத்துக்கு விரைந்த மக்கள் இருவரையும் மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதன்போது, இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துவிட்டமை உறுதிப்படுத்தப்பட்டது.

படுகாயமடைந்த பெண் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-28-9)

## ஆடைத்...

மேலும் ஆறு பேர் காயமடைந்துள்ளனர். செம்மலை, வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு, வேணாவில் பகுதிகளைச் சேர்ந்த ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களே விபத்தில் உயிரிழந்துள்ளனர் என்று முதற்கட்டத் தகவல்கள் கிடைத்துள்ளன. எனினும், உயிரிழந்தவர்களின் விவரங்கள் தொடர்பில் மருத்துவமனை வட்டாரத்தில் இருந்து எந்த உத்தியோகபூர்வ அறிவித்தலும் நேற்று இரவு வரை விடுக்கப்படவில்லை.

விபத்துத் தொடர்பில் தகவல் அறிந்ததும், புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்களின் உறவினர்கள் புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலைக்கு முன்பாக நேற்றுக் குவியத் தொடங்கினார்கள். நூற்றுக் கணக்கில் அவர்கள் குவிந்ததால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. உயிரிழந்தவர்களின் பெயர் விவரங்களை உறுதிப்படுத்தி அறிவிக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து, முற்பாதுகாப்பு நடவடிக்கையாக ஆடைத் தொழிற்சாலைக்கு பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. இரவிரவாக அங்கு பரபரப்பான நிலையே நிலவியமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## பிரதிப்...

ளார். வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனால், ஆளுநர் அலுவலகத்தில் வைத்து அவருக்கான நியமனக் கடிதம் கையளிக்கப்பட்டது. (அ-ம-66-27)

## பருத்தித்துறையில்...

கோவிலுக்கு முன்பாகவுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத்திடலில் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது. சர்வமதத் தலைவர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், வர்த்தக சங்க பிரதிநிதிகள், பொதுமக்கள் என பல தரப்பினரின் பங்களிப்புடன் காலை 8 மணிமுதல் இந்த உணவுத் தவிர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது. இதைத் தொடர்ந்து காலை 10.48 மணிக்கு அஞ்சலி நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (அ-ம-100)

## 38ஆவது...

இன்று காலை 7 மணியளவில் ஊரெழுவிலுள்ள தியாகதீபம் திலீபன் பிறந்த இல்லத்தில் அஞ்சலி செலுத்தப்படும். அதனைத் தொடர்ந்து காலை 7.30 மணியளவில் தியாகதீபம் திலீபன் நினைவு சுமந்த ஊர்திப் பேரணி நல்லூர் கிட்டுப் பூங்கா நோக்கி ஆரம்பமாகும். காலை 8 மணியளவில் கிட்டுப் பூங்காவிலிருந்து நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியை நோக்கி நடைபவனி ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 10.48 மணியளவில் திலீபன் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர் துறந்த நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வடக்கு வீதியில் சுடரேற்றப்படும். சமநேரத்தில் நல்லூரிலுள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியடியில் பொதுச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்படும். அகவணக்கத்தைத் தொடர்ந்து மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டுத் தொடர்ந்து மலர் அஞ்சலியும் செலுத்தப்படுமெனத் தியாகதீபம் திலீபன் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (அ-ம-66-100)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

படங்கள் ஐ. சிவசாந்தன்




தியாகதீபம் திலீபனின் 11ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று வியாழக்கிழமை நல்லூர்ப் பின் வீதியில் அமைந்துள்ள தியாகதீபத்தின் நினைவிடத்தில் இடம்பெற்றன. இதன்போது சுடரேற்றி, திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-66,100)

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
2025 ஆம் ஆண்டுக்கான பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT | BBA(Hons)
OCTOBER INTAKE | 2025
அனுமதிகளுக்கு அழைக்கவும்!
SLIIT NORTHERN UNI
239 Arasadi Road,
Kanthermadam Junction, Jaffna
021 7534 807

# ‘கைக்கூ’ கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,செப்.26

எழுத்தாளர் பொன்.சுகந்தனின் 20 கவிதைத் தொகுதிகளின் முதலாவது நூலான ஆலம் விதை எனும் ‘கைக்கூ’ கவிதை நூல் வெளியீடு, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 2 ஆம் திகதி விஜயதசமியன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும்.

பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் கி.கந்தவேள் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா கலந்துகொள்வார். நூல் வெளியீட்டுரையை பலாலி ஆசிரியர் கலாசாலையின் ஓய்வுநிலை அதிபரும், மூத்த கவிஞருமான சோ.பத்மநாதன் நிகழ்த்தவுள்ளார். (க-இ)

# மலையாளத் திரைப்படம் ‘கதாபுருஷன்’ திரையிடல்

யாழ்ப்பாணம் ,செப்.26

புகழ்பெற்ற மலையாளத் திரைப்பட நெறியாளரான அடூர் கோபாலகிருஷ்ணனின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட, ‘கதாபுருஷன்’ திரைப்படம் (1996 இல், சிறந்த திரைப்படத்துக்கான இந்திய தேசிய விருது பெற்றது), யாழ்ப்பாணத் திரைப்படக் கழகத்தின் மாதாந்தத் திரையிடலில் திரையிடப்படவுள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிறு மாலை 4 மணிக்கு, 18 / 2, அம்மன் வீதி (பலாலி வீதியிலுள்ள வீனஸ் மருத்துவமனை அருகில்), கந்தர்மடம், யாழ்ப்பாணத்திலுள்ள ‘எங்கட புத்தகங்கள் இல்லத்தில் திரைப்படம் திரையிடப்படவுள்ளது. ஆங்கிலத் துணைத் தலைப்புகளுடனுள்ள இந்தத் திரைப்படம், இலவசமாகக் காண்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# கல்விக் கண்காட்சி

மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் ஆக்கத்திறன் கல்விக் கண்காட்சி இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகள் விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-131)



கோப்பாய் பிரதேச செயலகத்தில் நவராத்திரியை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை முதல் தினமும் சிறப்புப் பூஜை வழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன. (ச-25, 17)

# கதைகூறல்போட்டிக்கு விண்ணப்பங்கோரல்

யாழ்ப்பாணம்,செப்.26

10 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கான கதை கூறல் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்ட தேசிய கலை இலக்கியப் பேரவை மற்றும் காலையடி மறுமலர்ச்சி மன்ற நூலகம் இணைந்து இந்தப் போட்டியை நடத்தவுள்ளன.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி காலை 9 மணிக்கு காலையடி, பண்டத்தரிப்பில் அமைந்துள்ள மறு மலர்ச்சி மன்றத்தில் போட்டி இடம்பெறும். போட்டியில் பங்குபற்றுபவர்கள் முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்த திகதி, கற்கும் தரம், கல்விகற்கும் பாடசாலை, பங்குபற்றும் போட்டி ஆகிய விவரங்களை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதிக்கு முன்னதாக நேரடி யாகவோ, தபால் மூலமாகவோ அனுப்பமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

English and Maths Classes
Zoom அல்லது தனியாகவும் அல்லது குழுவாகவும் வீடு வந்து கற்பிக்கப்படும்.
Gr 1 to O/L-Maths
(தமிழ் மூலமும் ஆங்கில மூலமும்)
and English for all
தொடர்புகளுக்கு: 077 331 4608

அகரம்
உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்
புதிய கல்வி ஆண்டு 2026
புலமைப்பரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான
புதிய தரம்-06
தமிழ் மொழி மூல, English Medium
வகுப்புக்கள் ஆரம்பம்
01.10.2025 (புதன்கிழமை)
மாலை 3:30 - 5:30 வரை
அனுமதி வழங்கப்படுகிறது
"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

வேலையாட்கள் தேவை
சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த,பழக விரும்பும் ஆண் / பெண் வேலையாள் தேவை.
(சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 077 456 9678

வேலையாட்கள் தேவை
வடமாகாணத்தில் இயங்கும் கட்டட ஒப்பந்த நிறுவனம் ஒன்றிற்கு அனுபவம் உள்ள மேசன், கூலியாட்கள் தேவை
தொடர்பு: 076 783 3020

TECHNO WORLD
A/L தொழில்நுட்பக் கல்லூரி
10 வது வருடத்தில் தடம் பதிக்கின்றது
A/L 2025 பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் அனைத்து மாணவர்களுக்குரிய
விசேட செயலமர்வு
27,28,29 September 2025
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
30,01,02 October 2025
பொறியியல் தொழில்நுட்பவியல்
உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்
03,04,05 October 2025
ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம்
காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.15 மணிவரை
இடம் :- வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 017 5346
(CR/46099)JK

மணல் விற்பனைக்கு
கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு.
தென்மராட்சி 45,000
யாழ்மாவட்டம் 50,000
வடமராட்சி 50,000
விநியோகிக்கப்படும். மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ் மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும்.
தொடர்பு: 076 324 9977

காணி விற்பனைக்கு
மீசாலையில் 20 பரப்பு காணி விற்பனைக்கு
தொடர்பு: 077 794 8012

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... இல் உள்ள அவர்களது பணிமனையில் 26.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org